ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

श्मशानेष्वाक्रीडा स्मरहर पिशाचास्सहचरा
श्चिताभस्मालेपः स्रगपि नृकरोटीपरिकरः ।
अमङ्गल्यं शीलं तव भवतु नामैवमखिलं
तथापि स्मर्तॄणां वरद परमं मङ्गलमसि ॥ महिम्न ॥

ஸகலப்பிராணிகளுக்கும் ஹிம்ஸையைக் கொடுக்கும் துஷ்டனான மன்மதனை ஸம்ஹாரம்செய்த ஹே ஈசா! உமக்கு க்ரீடாஸ்தானம் மயானம். உம்முடன்கூட ஸஞ்சரிப்பவர்கள் பிசாசங்கள். மயானத்திலிருக்கும் சவத்தினுடைய சாம்பல்கள் உமக்குச்சிறந்த வாஸனைப்பூச்சுக்கள். மனுஷ்யர்களுடைய மண்டை ஓடானது உமக்கு மாலையாகின்றது. உம்முடைய ஸகல சாமான்களும் பிறரால் இகழக்கூடியனவும் அமங்களமாகவும் இருக்கின்றன. அவ்விதமிருப்பினும் ஹே வரதா! பக்தர்களுக்கு வேண்டிய இஷ்டத்தை அளிக்கும் சக்திவாய்ந்த பரமேசுவரா! உம்மை ஸ்மரிக்கிறவர்களுக்குச்சிறந்தமங்களஸ்வரூபமாக விளங்குகிறீர்.

மஹான்களான மகரிஷிகளுக்கும் அல்லது மூவுலகங்களுக்கும் அதிபதியாய் விளங்கும் விஷ்ணு; சங்கரர்; இவர்களுக்கும் துஷ்டர்களை நிக்கிரஹம்செய்யவோ, சிஷ்டர்களைப்பரிபாலிக்கவோ, ஸாதனங்கள் வேண்டுமென்கிற நியாயமில்லை. ஒருவிதமான ஸாதனமுமின்றி மனதிற்தோன்றும் சங்கற்பத்தையே சிறந்த ஸாதனமாகக்கொண்டு அவர்களிஷ்டத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய சக்தி அவர்களுக்குண்டு. பெரியோர்கள் யாவரும் இவ்விதமென்று கூறவியலாத விசித்திரமான சக்தி யுடையவர்களாகையால் அவர்களிடம் நாம் பயபக்தியுடன் அவர்களுடைய ஆக்ஞையைத் தாண்டாமல் சரியாய் அனுஷ்டித்துவர வேண்டுமென்று இதினால் அறிவிக்கப் படுகின்றது.

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

குரோதன-ஸூ மாசி-மீ ௧௪௨


## காலத்தின் கொடுமை.

(௬௯-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸகல தர்மங்களுக்கும் அடிப்படையாய் விளங்கும் விவாஹத்தை அடியோடு கெடுத்து தர்மத்தின்பொருட்டு ஏற்பட்டகார்யத்தை அதர்மமாக நடத்தி

**स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसंकरः ।**
**संकरोनरकायैव...................... ॥**

'ஸ்திரீகள் தோஷமுள்வர்களாக ஆய்விட்டால் வர்ண ஸங்கரம் ஏற்பட்டுவிடும். வர்ணஸங்கரம் ஏற்பட்டால் அதனால் சகல ஜனங்களும் கொடியநாகத்திற்கு இறையாகவேண்டு'மென்று ஸ்ரீ பகவான் வாய்விட்டு கீதையில் கதறியிருப்பதை நீங்களறியாதவர்ளோ? 'இவ்வித அதர்மத்தை நம் தேசத்தில் நிலை நாட்டவேண்டும்' என்று ஒருவர் பிரயத்தினப்பட்டால் இந்தக்காலத்திலும் ஆஸ்திகர்கள் மௌனம் ஸாதிக்கலாமா? பெரிய ஆபத்து நேருங்கால் தைர்யமாய் முன்னுக்குவந்து அதைத்தடுப்பதற்கு வேண்டிய வேலையை நம்மாலியன்றவரையில்செய்யநாம் கடமைப்பட்டவர்களில்லையா? இதைக்காட்டிலும் பெரிய ஆபத்து வேறுஎன்ன வேண்டும்? ஒரு சமயம் இந்த விவாஹமசோதா சட்டமானால் பிராமணக் கன்னிகைகளுக்கு விவாகம் எப்படி நடைபெறும்? யாராவது 12 வது வயதிலோ அல்லது 13வது வயதிலோ சரீர வளர்ச்சியால் 11வது வயதில் ருதுவானகன்னிகைக்கு நிஷேகத்தை நடத்தினாலும் அல்லது 14 வயதில் நடத்தினாலும்இவருக்கு விரோதியான ஒருவர் இவரிடமிருக்கும் துவேஷத்தால் சட்ட

விரோதமாய் 11 வயதுள்ள தம் புத்திரிக்கு இந்த மாதிரிசெய் கிருசென்று அரசாங்கத்தாரிடம் மனுமூலமாய் அறிவித்தால் உடனே இதன் உண்மையை யறியவேண்டி அந்த ஸ்திரீயை டாக்டர்களைக் கொண்டு பரிசோதனை செய்ய வேண்டிவரும் முதலில் ஒரு டாக்டர் பார்த்து "சரியான காலம்தான் செய்ய லாம்" என்று சொன்னாலும் இவருக்கு விரோதமாயிருப்பவர் இன்னும் அதிகமாக அவமானம் செய்யவேண்டி "இந்த டாக்டர் லஞ்சம் வாங்கிக்கொண்டு இவ்விதம் அவர்களுக்கு ஸாதகமாகச் சொல்லிவிட்டார். வேறு பெரிய ஸர்ஜனை (Surgeon) க்கொ ண்டு பரீக்ஷிக்கவேண்டுமென்று மறுபடியும் ஆக்ஷேபித்தால் அவ ரும் வந்து அந்த ஸ்திரீயைப் பரீக்ஷை செய்யும்படி நேரலாம். காலதோஷத்தால் புருஷர்களிடம் சில தர்மங்கள் மாறியிருந்தா லும் ஆஸ்திக வம்சத்திலுண்டான நம் ஸ்திரீகள் அதிகமாகத் தரு மநெறிகளிலிருந்தும் மாருமல் தங்கள் பதிகளையும் அந்தந்த சம யங்களில் நற்கன்மங்களை அனுஷ்டிக்கும்படியும் போதித்துவரு கிருர்கள். இவ்விதம் கற்பு, நாண்ம், அச்சம் முதலிய தர்மங் களைக் கைவிடாமலும் பர்த்தாவைத்தவிர இதரர்களைக் கண்ணெ டுத்து நோக்காமல் தம் வீட்டுக்குள்ளிருந்துகொண்டு தங்களுக் குற்ற வேலைகளைச்செய்துகொண்டு காலங்கழிக்கவேண்டிய இவர் களுக்கு இவ்வித மானக்கேடான கார்யம் நடக்கும்படி நேரிட் டால் இதைக் காட்டிலும் இந்துக்களுக்கு மானபங்கத்தையுண்டு பண்ணும் கார்யம் வேறு என்ன இருக்கிறது ?

ஹே பண்டித சிகாமணிகளே ! ஆஸ்திகோத்தமர்களே! இனியும் நீங்கள் உறங்குவது உசிதமா ? நம்மாலியன்றவரை யில் லோகக்ஷேமத்திற்கும், தர்மஸ்தாபனத்திற்கும், பாடுபடவே ண்டிய பொறுப்பு நமக்கில்லையா ? ஆசார்யர்களின் திருவடியை சேவித்து அந்த அனுக்கிரஹத்தால் நம்மாலறியப்பட்ட தர்மங் களை வேண்டியசமயங்களில் வெளியிடாமல் ஊமையன் கண்ட கனவுபோல் நம் உள்ளத்தில் மாத்திரம் வைத்திருந்தால் யாது பயன் ஏற்படும். பிறருக்கும் உபகரித்து தாமும் அனுபவிப்ப தற்கு யோக்கியமான ஒரு வஸ்துவைத் தாம் மாத்திரம் அனுப விப்பது பெரியோர்களின் பெருமைக்கழகா ? நல்ல காரியங்களில்

நம்மாலியன்றவரை முயற்சி செய்யவேண்டியது நமது கடமை யன்றோ? இவ்விதம் கருதியே மஹான்களான மனு யாக்ஞவல்கியர் பராசரர் முதலியவர்களும் லோகோபகாரத்தின் பொருட்டு சுருதிகளின் தத்வார்த்தங்களை ஸ்மிருதி என்கிற பெயரால் வெளியிட்டிருக்கிறார்கள். அவ்விதம் வெளியிடப்பட்ட கிரந்தங்கள் உபயோகப்படுமா உபயோகப்படாதா என்கிற விசாரத்தை அவர்கள் செய்யாமல் இது நல்ல காரியம் நாம் இதைச்செய்யவேண்டும்என்று யாதொருபதில் உபகாரத்தையும் எதிர்பாராமல் எப்படிச்செய்திருக்கிறார்களோ அவ்விதம் நமக்கும் முடிந்தவரையில் தர்ம காரியங்களைச் செய்யக்கடமையில்லையா? 'ஹிந்துக்கள்' என்றும் 'வைதிகர்கள்' என்றும் 'ஸநாதன தர்மம்' என்றும் கூறுவதற்கு அடிப்படையாயுள்ள விவாகத்தை விதியைவிட்டு விலக்கித் தோன்றியவாறு நடத்தவேண்டுமென்று நம்மையும் நிர்ப்பந்தித்தால் இதைக்காட்டிலும் பெரிதான கஷ்டம் வேறு என்னவேண்டும் இன்னும் என்னென்ன ஆபத்துக்கள் வரப்போகின்றனவோ தெரியவில்லை. எவ்விதம் நேர்ந்தாலும் அதை விலக்குவதற்குற்ற நமது முயற்சியை விடக்கூடாது. ஒருவனுக்கு ஒரு ரோகம் எற்பட்டால் அதைப்போக்கவேண்டி எப்படிப்பல ஔஷதங்களை ஸேவிக்கிறோமோ அவ்விதமே இந்த வியாதியை விலக்குவதற்கு முயற்சி என்கிற ஔஷதத்தை நாம் அவசியம் ஸ்வீகரிக்கவேண்டும். பகவதனுக்கிரஹத்தால் ரோகம் நிவர்த்திப்பது போல் இதுவும் நிவர்த்திக்கலாம். சில வியாதிகள் ஔஷத ஸேவையால் நிவர்த்தியாகவில்லை என்பதைக்கொண்டு ஔஷதத்தை உபயோகமில்லை என்று கருத முடியுமா? அவ்விதமே இதையும் நினைத்துப் பிரயத்தினம் செய்யவேண்டியது முக்கியம்.

இவ்வித மசோதாக்கள் அமுலுக்கு வருமானால் அதனால் நமக்கு நேரும் கஷ்டங்களையும் மனு முதலானமகரிஷிகளுடைய ஸித்தாந்தத்திற்கு விருத்தம் என்றும், அவ்விதம் நடத்தும் விவாஹம் வைதிகமாகமாட்டாது என்றும் அந்தவிவாஹத்தால் அடையப்பட்ட ஸ்திரீயை வைத்துக்கொண்டு வைதிக கர்மானுஷ்டானம் ஒன்றும்செய்ய சாஸ்திரங்கள் அற்பமேனும் இடங்கொடுக்கவில்லைஎன்றும்மற்றுமுள்ளபல லௌகிகஆபத்துக்களையும்ஆங்காங்

குவித்வான்கள் உபன்யாஸங்களாலும் துண்டுப் பிரசுரங்களாலும் பேபர்கள் மூலமாகவும் சகலஜனங்களுக்கும் அறிவித்து எல்லாரும் ஏகமனதாய் இவ்வித சட்டங்கள் அமுலுக்கு வரக்கூடாது என்று பலவிடங்களிலிலுருந்தும் ஆயிரக்கணக்கானமஹாஜர்கள் நம் காருண்யமுள்ள கவர்ன்மெண்டாருக்கு அனும்பும்படி செய்ய வேண்டும். இன்னும் மேதாவிகளான பெரியோர்களுக்கு இது விஷயமாய் எவ்விதம் செய்வது நலமென்று தோன்றுகிறதோ அவ்விதம் முயற்சி எடுத்துக்கொள்ள முன்வரவேண்டுமாய் நான் கேட்டுக் கொள்வதுடன் ஸநாதனதர்மத்தைப் பாதுகாப்பதாகக் கீதையில் வாக்களித்தவரான ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் சகல ஜனங்களுக்கும் ஆஸ்திக புத்தியைக்கொடுத்துத் தர்மகாரியத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி அனுக்கிரகிக்கவேண்டும் என்றும் அவரையே நானும் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

உபபத்திராதிபர்.

---

# வரருசி.

---

(௮0-வது பக்கத்தொடர்ச்சி.)

மாப்பிள்ளை வந்ததைக்கண்டு பரபரப்புடன்கூடின மனதையுடைய உபவர்ஷர் 'கற்றவரே!' உமது வதரூபமான தண்டத்தை செவியுற்ற பதிவிரதையான எனது பெண் சோகத்தால் பொசுக்கப்பட்டவளாய் இடைவிடாத கண்ணீர் பெருக்கால் நனைந்த கண்களோடு கூடினவளாய்க்கொண்டு என்னால் தடுக்கப்பட்ட போதிலும் கவனியாது அக்னிப்ரவேசஞ் செய்தாள். கிழத்தனத்தால் தளர்ந்த அவயவங்களை யுடையவளும் 'அந்தோ காத்தியாயன ஹா! ஏகஸந்தக்ராஹியே' என்று ஓய்வில்லாமல் புலம்பினவளுமான உனது தாயாரின் ஆவிகள் தானேவெளிப்பட்டன என்று உரக்கப்புலம்பினர்.

உபகோசாமணையாளன் இதைக்கேட்டதும் புதிதாய் நேர்ந்த சோகத்தின்வேகத்தால்சேதநமிழந்து அறுபட்டவேருடன்கூடின மரம்போல் தரையில் விழுந்தார். வெகு நேரங்கழித்து எழுந்து புலம்பினர். இஷ்டபந்துக்களின் மரணத்தாலுண்டான சோகாக்கினி யாரைத்தான் எரிக்காது.

பிறகு வாருசி அவ்விதமான அவஸ்தையையடைந்திருப்பதாகக் கேள்வியுற்ற வர்ஷோபாத்தியாயர் சீக்கிரமேவந்து சொல்லலானர்" குழந்தாய்! ஒருதடவைகேட்டுத்தெரிந்துகொள்ளும் புத்திக்கூர்மையுள்ளவனே! பிராகிருத மனிதன்போலவும் தர்மநுட்பமறியாதவன்போலவும், அறிவற்றவன் போலவும், உலகநடை அறியாதவன்போலவும், என் இவ்விதம் வருத்தங்கொண்ட ஆத்மாவைத்தடுத்துக் கொள்ளவில்லை. பிறந்தது முதற் கொண்டு உண்மையாகவே நீசோகரஸத்தையறியாதவன். இதுவும் உனக்கு வைராக்கியத்தைத் திடப்படுத்துவதற்கு உன் பக்தியால் ஆராதிக்கப்பட்ட தெய்வத்தால் நிகழ்ந்தது. ஆகையால் தைர்யமேற்றுக்கொள்ளப் படட்டும். ஆத்மாவானது திடப்படுத்திக்கொள்ளப்படட்டும். உலகத்தின் தத்வம் யோசிக்கப்படட்டும். இவ்வுலகில் ஸம்ஸாரசக்கிரத்தில் அநித்யமென்ற ஒன்றே நித்தியமாயுள்ளது. ஆகையால் ஈசனின் இந்த மாயையையறிந்தும் ஏன் மோகிக்கிருய்" என்று

இவ்விதம் அறிவிக்கப்பட்டவாக்கியகாரரான வாருசி துக்கத்தையுதறிவிட்டு வைராக்கியம்பற்றின மனத்தையுடையவராய் ஸகலத்தையும் துறந்து சமமொன்றையே துணையாகக்கொண்டு தபோவனத்தையடைந்தார்.

பிறகு நாட்கள் பல செல்லுகையில் புண்ணியமான அரண்யங்களில் வாஸஞ்செய்துகொண்டுவரும் வாருசி தற்செயலாக மகத நாட்டிலிருந்துவந்த பிராம்மணனிடம் யோகநந்தனுடைய வரலாற்றைக் கேட்டார்; அவரும் இவரையறிந்து வந்தனை வழிபாடுகளைச்செய்து கூறினதாவது—மஹாமேதாவியே! நீர் தபோவனஞ்சென்றதும் தக்கசமயம் வாய்ந்ததென்று முன் வைரங்கொண்டிருந்த சகடாலன் யோகநந்தனின் வதத்திற்கு உபாயத்தைச் சிந்தித்துக்கொண்டு பூமியைத்தோண்டுகின்ற சாணக்கியன்

என்ற வேதியனைக்கண்டான். 'எதற்காகத் தோண்டுகிறீர் என்று மந்திரியால் கேட்கப்பட்ட அவ்வேதியர் 'இந்த தர்ப்பத்தால் எனது கால் இடறப்பட்டது. ஆகையால் அந்த இந்த தர்ப்பத்தை வேரோடு பிடுங்காமல் நகரமாட்டேன்' என்றார். 'கடோரமான உறுதிகொண்ட இவரைத்துணையாகக்கொண்டால் தனது மனோரதம் நிறைவேறிவிடும்' என்று நிச்சயித்துச் சகடாலன் அவரை ஸம்மானித்து தனதுவீட்டிலேயே வஸிக்கச்செய்து நந்தராஜனின் உப்பரிக்கையில் லக்ஷம்பொன் தக்ஷிணையுடன்கூடின பிதிருதினமான த்ரயோதசி திதியில் நிமந்த்ரணஞ்செய்யப்பட்டவர்களில் முதலாவது ஸ்தானத்தில் அவரை ஏற்படுத்தினான். ஆனால் அதே ஸ்தானத்தை அரசனுக்குவேண்டிய சுபந்து என்ற வேதியரும் விரும்பினார். நந்தன் முன்னமேயே சாணக்கியனை ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பலாத்காரமாய் அக்ராஸனத்திலிருந்து நகரும்படி செய்துவிட்டான்.

பிறகு கோபத்தால் ஜ்வலிக்கும் சாணக்கியன் சிகையை அவிழ்த்துவிட்டு 'ஐச்வர்ய மதங்கொண்ட இவ்வரசனை ஏழுநாட்களில் தொலைத்து இக்குடுமியைக்கட்டிக் கொள்ளப்போகிறேன்' என்று பிரதிக்ஞை செய்தான். அந்த சாணக்கியனைத் தன்வீட்டிலேயே மறைவாய் இருக்கச்செய்து அவருக்குவேண்டிய உபகரணங்களை யாவற்றையும் சகடாலன் கொடுத்துவந்தான். மிகக் கோபங்கொண்ட அவ்வேதியரும் உக்கிரமான அதர்வமந்த்ரங்களால் கிருத்தியையுண்டாக்கினார். அதனால் பீடிக்கப்பட்ட யோகநந்தன் கொடூரமான உஷ்ணஜ்வரத்தால் தஹிக்கப்பட்டு ஏழாவது நாளில் மாணமடைந்தான். சகடாலன் உடனேயே ஹிரண்யகுப்தனைக்கொன்று முன் நந்தனின் குமாரனான சந்திரகுப்தனை ராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ்செய்து சாணக்கியனையும், மந்திரி ஸ்தானத்தில் அமர்த்திப் பழிக்குப்பழி வாங்கிவிட்டு புத்ரசோகத்தால் வைராக்கியம்பெற்று பெருங்காடு சேர்ந்தான்.—என்று.

இவ்விதம் மிகவும் துக்கிக்கத்தகுந்த யோகநந்தனின் வரலாற்றைக்கேட்டு மிகவும் வருத்தங்கொண்ட வாருசி உலகத்தை ஸாரமற்றதாகக்கண்டு, விந்தியாவாஸியான பரதேவதையை யுபாஸித்து அத்தேவதையின் ஆக்கினையால் புலிகளாலும் வானரங்க

ளாலும் நிறைந்த பிரவேசிக்கத் தகாத விந்தியவனத்தில் அலைந்து கொண்டு ஓரிடத்தில் உன்னதமான ஆலமரத்தைக்கண்டார். மரத்தினருகில் அனேக பிசாசுகளால் சூழ்ந்த காணபூதியென்ற வேதாளத்தை குபேரனின் சாபத்தால் பிசாசமான ஸுப்ரதீகன் என்றும் புஷ்பதந்தனுன தனக்குத்தோழனுன யக்ஷனென்றும் அறிந்து சினேகிதத்தை வெளிப்படுத்தி அவனுக்கு வித்யாதாசரித்திரத்தை வர்ணித்துத் தோழனே! சீக்கிரத்தில் இங்கு வரப்போகின்ற குணாட்யருக்கு இந்த அபூர்வமான கதையைச்சொல் பிறகு உனக்கு மோக்ஷம் ஏற்படும் என்று அவனுக்கு அறிவித்து தேகத்தை விட்டுவிடுவதற்காக புண்ணியமான பதரிகாசிரமத்திற்குப் புறப்பட்டார்.

நடுவில் ஹிமாலயத்திற்கு அருகாமையிலுள்ள வனங்களில் சஞ்சரித்துக்கொண்டு, கந்தமூலபலங்களால் ஜீவித்துவரும் 'ஸாகரஸர்' என்ற பொருள்வாய்ந்த பெயருடையமுனிவரைக்கண்டார். அவரால் அதிதி ஸத்காரத்தால் உபசரிக்கப்பட்டு அவரது ஞானத்தைப் பரீக்ஷிக்கவிரும்பி தர்ப்பத்தால் கிறப்பட அவரது உள்ளங்கையிலிருந்து பெருகும் ரத்தத்தாரையை சாகரஸமாகப் பரிணமிக்கச்செய்தார். அம்முனிவரும் அதைக்கண்டு 'ஸித்தனுகிறேன்' என்று கர்வங்கொண்டார். அப்போது வாருசி அவ்வஹங்காரத்தை ஞானத்திற்குத்தடையாக அவருக்குத்தெரிவித்து தெரிந்துகொள்வதற்கே உமது உதிரம் என்னுல் சாகரஸமாகப்பட்டது இதுவரையில் உம்மால் அஹங்காரம் விடப்படவில்லை. ஞானவழிக்கு அஹங்காரமானது தள்ளமுடியாத தாப்பாள் கட்டையல்லவோ! ஞானமில்லாமல் விரதங்கள் அனேகங்கள் அநுஷ்டித்தாலும் மோக்ஷம் கிட்டாது. முமுக்ஷுக்களின் சித்தத்தை அழியக்கூடிய ஸ்வர்க்கம் ஏமாற்றத்திறமையுள்ளதாகாது ஆகையால் அஹங்காரத்தை யொழித்து மோட்சத்திற்கு யத்தனஞ் செய்யும் என்று மோக்ஷரஹஸ்யத்தை உபதேசித்து வணங்கின அவரால் ஸ்துதிக்கப்பட்டவராய்ப் பதரிகாசிரமப் ப்ரதேசத்தையே அடைந்தார்.

அங்கும் நிராஹாரராய் திடபக்தி கொண்டவராய் உயிரில் அபிமானத்தையொழித்து அஹங்காரத்தைக் களைந்து மிகுந்த

நியமங்களால் காணங்களையொடுக்கி, பார்வதியின் சரணங்களை இடைவிடாது தியானித்துக்கொண்டு தீவ்ரமான த்வத்தால் ஆராதிக்கப்பட்ட ஸர்வமங்களையின் பிரஸாதமடைந்து யோகாக்னியால் களேபரத்தைத் தஹித்துவிட்டு நீல கண்டரால் கொண்டாடப்பட்டதனது வாவையுடையவராய்க் கொண்டு, திவ்யமான கதியையடைந்தார்.

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

# ஸம்ஸ்க்ருத வித்யாப்யாஸம்.

ஆஸ்திக சிகாமணிகாள்! அனைவருக்கும் ஸ்வதேசபக்தி அவசியம் என்பது எல்லோருமறிந்த விஷயமே. ஆனால் நான் தற்சமயம் அதின் அவசியத்தன்மையைக் குறித்து எழுதமனங்கொள்ளவில்லை. ஏனெனில் இவ்விஷயம் அனேக தினசரி பத்திரிகைகளால் அடிக்கடி போதிக்கப்பட்டு வருகிறபடியால் புதிதாய் சொல்லக்கூடியதல்ல, இப்பொழுது 'தேசபக்தி' என்றால் என்ன? எந்த எந்த வஸ்துக்களில் செய்யப்படும் பக்திக்கு தேசபக்தி எனப்பெயர் கூறலாம்? என்பதை மட்டும் விசாரிப்போம். 1 தன் தேசபாஷை 2 தன் தேச ஆசாரங்கள் 3. தன்தேச மதங்கள். மற்றும் 4. தன் தேயத்தில் உண்டாகக்கூடிய வஸ்துக்களை அபிவிருத்திசெய்யும் உபாயங்களை அனுஷ்டிப்பதில் பூர்ணஆதரவு. இவைகளே தேசபக்தி எனப்படும் என்று பக்திவாய்ந்த சான்றோர் சாற்றுகின்றார். முதலாவதாக தன் தேசபாஷை ஒன்று விருத்தியடையுங்கால் மற்றெல்லாம் எளிதில் சீக்கிரம் விருத்தியாய்விடும்என்பதில்ஐயமில்லை. ஏனெனில்தன்லோகவார்த்தாபோதத்திற்கும் தன்மதஅறிவிற்கும்தன் ஆசாரஞானத்திற்கும் பாஷையன்றோ காரணம். அந்த பாஷை எது? என்று கேட்குங்கால் "ஸம்ஸ்கிருதபாஷை" தான் என்று உத்திரம் கூறலாம். 1. தமிழல்ல. 2 தெலுங்கல்ல. 3. மலையாள பாஷையுமல்ல. 4. கடைசியாக ஹிந்தி முதலிய பாஷைகளுமல்ல. தன்தேசபாஷை. ஸம்ஸ்க்ருதபாஷைதான் என்பதை நிரூபிப்போம். நம் தேசத்தில் வழங்கிவருகிற மற்ற ஒவ்வொரு பாஷைகளிலும் இடையிடையே அனேக ஸம்ஸ்க்ருத பதங்கள் காணப்படுகின்றன. ஸம்ஸ்கிருத

பாஷையிலோ மற்ற எந்த பாஷைகளிலிருந்தும் எடுக்கப்பட்டப தங்கள் ஒன்றும் காணப்படவில்லை. மற்ற ஒவ்வொரு பாஷையும் ஒவ்வோர் தேசத்தில் பிரசாரத்தை அடைந்திருக்கிறது. தெலுங்கர் தமிழில் பேசுவதில்லை. தமிழர் ஹிந்தியால்பேசுவதில்லை. இவ்விதமல்லாமல் ஸம்ஸ்கிருதபாஷையோ எங்கும் காணப்பட்டும் எல்லாராலும் ஆதரவுபெற்றும் இருக்கிறது. தவிரவும் ஹிந்துமதக்ரந்தங்கள் எல்லாம் ஸம்ஸ்கிருதபாஷையிலேயே இருக்கின்றன இந்துக்களான நமக்கு இதைவிட ஓர் அத்தாட்சியும்வேண்டுமோ. ஆனல் இதர பாஷா சப்தங்கள் மாற்றப்பட்டு சம்ஸ்க்ருத பாஷையில் சேர்க்கப்பட்டனவென்றுசொல்வதிற்குமில்லை. சம்ஸ்க்ருத பாஷை சப்தங்கள் திருடமான இந்திரியங்களால் தான் உச்சரிக்கத் தகுந்தவை என்பதை எவர்தான் அறியார்.? ஆகையால் உச்சரிக்கத் திறமையின்மையால் கடின சப்தந்தான் மாறுபடுமேயின்று சுலபமாக உச்சரிக்கக்கூடிய சப்தங்கள் ஓர் காலும் மாறுபடா. எல்லாரும் லாகவத்தை அபேக்ஷிக்கிறவர்களன்ரோ, மேலும் பாஷைகளில் தத்வத்தையறிந்த மேனாட்டு நிபுணர்கள் இந்த பாஷைதான் சகல பாஷைகளிற்கும் மூலபூதமான பாஷையென்று நிர்ணயிக்கிறார்கள். ஆகையால் சம்ஸ்கிருத பாஷைதான் ஆதியான நம் தேசபாஷை என்று ஸித்திக்கிறது. இந்த சம்ஸ்கிருதபாஷை ஒன்று விருத்தி அடையுமளவில் மற்றவைகள் தானகவே விருத்தி அடைந்துவிடும். அதின் அபிவிருத்தியின் பொருட்டு அநேக சாதனமுறைகளிருந்தபோதிலும் ஆங்காங்கு தர்மசீலர்களான ஆஸ்திகர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கலாசாலைகளுக்குத் தங்களது குழந்தைகளை அனுப்பித்தலே முதன்மையான ஸாதநமாகும். அநேக கலாசாலைகள் மாணாக்கர்களின்றி சிரமப்படுகின்றன. அதற்கென்று வைக்கப்பட்ட பொருளாதாரமும் வெவ்வேறு விஷயங்களில் விநியோகமடைகின்றது. கடைசியாக வேறு கதியில்லாமல் போனல் தான் தமது மக்களை கலாசாலைகளுக்கனுப்புகின்றனர். இச்சிறுவர்களை சிஷ்யர்களாகக்கிரஹித்து போதிக்கும் ஆசாரியர்களுக்குத்தான் என்ன. இவர்களை ஆகாரம் முதலியவையால் போஷிக்கிறதலைவர்களுக்குத்தான் என்ன. பெரியோர்களே ! எவ்வளவு உத்ஸாகம் உண்டாகக்கூடும், பாஷைக்குத்தான் எவ்வளவு

அபிவிருத்தியுண்டாகும்? சற்று ஆலோசியுங்கள். இவ்விதம் நம் தேசபாஷைக்குவற்பட்டிருக்கும் துரவஸ்தையை யார் முன்னிலையில் சொல்லுவோம். தன் மனதை ஆற்றிக்கொள்வோம். சாஸ்திரங்களோ கூர்மையான புத்தியுடையோரால் தான் அப்யசிக்கத் தகுந்தவை. ஓர் மேதாவியும் வாசித்து பகுமானிக்கக்காணோம். அந்தோ கஷ்டம்! ஆனல் ஒரு ஸந்தேகமிருக்கலாம். சமஸ்கிருத பாஷைக்கு ஆயிரக்கணக்கான குணங்கள் இருக்கட்டும், அவ்விதமிருந்தாலும் தற்காலம் ஆங்கிலத்தைப்போல் மனிதர்களுக்கு ஜீவிகையாக ஆகவில்லையே. இதைப்படித்தென்ன பிரயோஜனம் என்று. இதற்கு விடையளிப்போம். ஆங்கிலம்கற்றஅனைவரும் மாதம் ஆயிரக்கணக்காகவோ நூற்றுக்கணக்காகவோ ஸம்பாதிக்கவில்லை. ஸமமாகப் பார்க்குமளவில் இரண்டல்லது மூன்றுபேர்களே அவ்விதம் சம்பளமடைகின்றனர். மற்றவர் அனேகமாக பத்து அல்லது இருபதுரூபாயே அடைகின்றனர். இந்த பத்துரூபாயை ஸம்பாதிப்பதற்கும் நகரவாஸம் செய்யவேண்டியிருக்கிறது. நகரவாஸத்திற்கும் நாகவாஸத்திற்கும் மத்யாக்ஷாமாறுதலைத் தவிர வேறொருபேதமுமில்லை. சாமான்கள் மிகவும் கிராக்கியாகவே இருக்கின்றன. இவர்களடைந்த சம்பளம் ஓர் ஆண்பெண்ணுக்கும் போதியதாகாது. சுருக்கிச் சொல்லுகையில் இவர்கள் மிகவும் கஷ்டத்தையே அனுபவிக்கின்றனர். வெளியே புறப்படும்நேரத்தில் வெண்மையான சொக்காய்களணிந்தும் புதிய வஸ்திரம் தரித்தும் வருகின்றார்கள். இதைப்பார்த்து ஜனங்கள் "இவன்தான் ராஜா" இவன்தான் சுகசாலி" என்று எண்ணுகிறார்கள். இவ்விதம் வெளியாடம்பரங்களைமட்டும்கண்டு அவர்களுக்குத்தமதுகந்யகைகளைக்கலியாணம்செய்துகொடுத்துவிடுகிறார்கள். பின்பு துயரமடைகின்றனர். சிலர் ஆங்கிலத்தைக் கற்றும் ஜீவனோபாயத்தையடையாமல் வீட்டிலேயே தங்கிவிடுகிறார்கள். வீட்டில் வஸித்துக்கொண்டு மாதம் எண்முறை (अष्टकृत्वः) க்ஷௌரம்செய்துகொள்பவர்களாயும் (पञ्चकृत्वोऽह्नभोजनम्) நாளுக்கு ஐந்துதடவை புஜிப்பவர்களாயும் தாய்தந்தையரோடு போராடியும் ஆஹாரஸமயத்தில்மட்டும் வீட்டையணுகுகிறவர்களாயும் (पात्रेसमिता:) வீட்டில் நாட்டாமை செலுத்துகிறவர்களாயும்

ஆய்விடுகின்றனர். இதுதான் பெரிதான சிலரின் கைகண்ட பலன். இன்னும் சிலர் ஓர்விருத்தியுமின்றி ஓட்டல்களையும் புகுந்துவிடுகின்றனர். இந்தப்பிரகாரம் பலவிதம் காணப்படுகின்றனர். உங்களுக்கும் இதுதானு சரியென்று தோன்றுகிறது? அந்தந்த யோகங்களில் இருக்கும் சிரமம் வர்ணிக்கத்தக்கதல்ல. சிராத்ததினத்திலும் யஜமானனிடத்திலிருந்து இவர்களுக்கு ஒழிவு (Leave) கிடைப்பதில்லை. இந்தக்கஷ்டம் ஸம்ஸ்கிருதம் கற்கும் மனிதர்களுக்குமுண்டென்றாலும் ஒருவனுக்கு ஆயிரக்கணக்காக செலவானபிறகுமற்றொருவனுக்குஇச்செலவின்றி" என்பதால் ஸம்ஸ்கிருதம் அப்யஸிப்போனுக்கு பெரும்ஸௌகரியம் ஏற்படுகிறது. மேலும் ஸம்ஸ்கிருதம் கற்போர் அனேகம்போாகில் அப்பொழுதேதாவது கதியேற்படாமற்போகாது. பிறக்கத்தான் வேண்டியிருக்கும். எவ்விதம் பர்வதத்தில்பெய்த மழை ஜலம் தனித்தனிமார்க்கத்தை அடைகின்றதோ அவ்விதமே இவர்களும் ஒவ்வோர்மார்க்கம் கல்பித்துக்கொள்வார்கள். ஒருவராவது பசிப்பிணியால் உயிர்துறந்தார் என்று இதுகாறும் நாம் கேட்டதில்லை. கண்டதுமில்லை. எல்லாம் வல்ல ஸர்வேச்வானன்றோ எல்லாரையும் பரிபாலிக்கிறார். ஒருகாலும் "ஸம்ஸ்கிருதம் கற்றவன் தனமடையான்" என்று நியமமாகச் சொல்லுவதும் அஸாத்யம். தற்காலமும் அப்பேறுபெற்ற அறிஞர்களும் இருக்கிறார்கள். எவர்கள் ராமாயணம் முதலியவைகளை உபந்யஸித்து மாதந்தோறும் இருநூறு முன்னூறுக் கணக்காகச் சம்பாதிக்கின்றார்களோ எவர்களுக்கு வித்யையைக்கற்றும் தன அதிர்ஷ்டம் இல்லையோ எவர்களுக்குச் சாமர்த்தியமில்லையோ அவர்கள் கஷ்டமடைகின்றனர். ஆகையால் தன் ஸாமர்த்யாஸாமர்த்யங்களே கௌரவாகௌரவங்களுக்குக் காரணம். ஆகையால் ஸம்ஸ்கிருதபாஷைக்கு இதுவோர் அபவாதமே. "ஸம்ஸ்கிருதம் கற்றவர் ஓர் ஒற்றைச்சோழியுமடையார்" என்பதை ஒப்புக்கொண்டே பேசுவோம். ஒருவன் (School Final) பரியந்தம் வாசிப்பதாகவைத்துக்கொள்வோம். 10 வருஷம் வாசிப்பதாக அங்கீகரிப்போம். அதுவரை அவனால் சுமார் இரண்டாயிரம் ரூபாய் செலவிட வேண்டியதாகும். அந்தப்பத்துவருஷம் வரையில் ஆங்கிலம் கற்காமல் ஸம்ஸ்கிருதமே கற்றுவந்து அந்தப்பணத்தை ஓர் உண்டி

யில் போட்டுவந்தால் அப்பொழுது என்ன ஸௌக்கியமேற்படும் என்று ஆலோசியுங்கள். புத்தாவது ஆண்டின் முடிவில் சேர்த்துப் பார்த்தால் ரூபாய் இரண்டாயிரமாகும். இந்தப்பொருளால் சிரமமின்றி அவன் ஜீவிக்கலாம். ஸம்ஸ்கிருதம் கற்போருக்கு ஆகாரச்செலவும் கிடையாது. அச்செலவின்மையால் ஒருமிக்க சேர்க்குங்கால் மூவாயிரம் ரூபாய்களாகும். இவ்விதம் பலபிரகாரங்களால் ஸம்ஸ்கிருதக்கல்விக்கு அனேக குணங்களிருக்கின்றன என்று நினைத்து "ஸம்ஸ்கிருதம் கற்றல் பாழுங்கிணற்றில்விழுத" லென்ற பிராந்தியையொழித்து எல்லாரும் தத்தம் குழந்தைகளை ஸம்ஸ்கிருத கலாசாலைக்கனுப்புங்கள். பெரியோர்களே! உங்களுக்குத் தம்மக்கட்களால் வயதுகாலத்தில் பரிபாலனம் வேண்டுமேயாகிலும் மரியாதை அவசியமென்றும் சிராத்தம் அவசியம் என்றும் க்ஷேமபரம்பரை வேண்டுமென்றும் எண்ணமிருந்தால் குழந்தைகளை ஸம்ஸ்கிருதகலாசாலைக் கனுப்புங்கள். இவ்விதம் அனேகப்பிரகாரம் வர்ணிக்கப்பட்டபோதிலும் யார் செவியில் புகப்போகிறது? ஆங்கில ஆசாரமோஹத்தால் மூர்ச்சையடைந்திருக்கும் இத்தருணத்தில் இவ்வினிதுவார்த்தை என்னசெய்யும். "ஸமயத்தில் சொல்லவேண்டும் அன்றேல் மனம் ஸமாதானமடையாது" என்ற நியாயப்படி தெரிவிக்கநேர்ந்தது. கடவுள் எப்பொழுதாவது நம்மிடத்தில் கருணைசெலுத்தாமல் போவாரா என்று விசுவஸிப்போம்.

கே. ராமஸ்வாமி.

---

# பகவத்கீதையும் வர்ணாச்ரமமும்.

பகவத்கீதை பாற்கடலாகும். அதிகாரிக்கேற்ற பலனையறிவிக்கிறது. அவரவரது பரிபாகத்திற்கேற்றபடி அர்த்தம் செய்கின்றனர். ஒரே புஷ்பமாலை பக்தனுக்குப் பூஜைக்காம். விடனுக்குத் தாஸிக்காம். குரங்குக்குக் கசக்கவாம். தனக்கேற்ற கருத்தையே அது வெளியிடுவதாக ப்ரமாணத்துடன் கோஷிப்பர். காலஞ்சென்ற திலகர் கர்மயோகமே அதன் கருத்தென்றார். காந்தியோ ராட்டினமும், ஸத்யாக்ரஹமுமே என்கிறார். அடையார் கோஷ்டியோ ஸமத்வம், ஸஹோதரத்வம், என்கின்

னர். ப்ரான்ஸிலும், அன்னியதேசத்திலும், இதைப்போற்றுகின்றனர். நாம் எப்படியோ. எல்லோர்வாயிலும் கீதை அடிபடுகிறது. ராமாயணம், பாரதம் என்றவற்றைச் சொல்லும் புராணிகர்களும் கீதையைச் சொல்லும்படி வற்புறுத்தப்படுகின்றனர். இவையெல்லாம் சிலநாள் கூத்தாடி மறையும் நாகரிகத்தைச் சேர்ந்தனவேயாகும். ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ, ஸாதன லேசம்கூட இல்லாதவரிடம் கர்மமார்க்கத்தை நிந்தித்துக் கீதையைப் போதிப்பது மன்னிக்கத் தக்கல்ல.

**कलौ वेदान्तिनः सर्वे भविष्यन्ति नराधमाः ।**

என்றபடி தலையில் கிராப்பும், முகக்ஷவரமும், வாயில் பீடியும், தரிக்கும் வைராக்ய ஸம்பன்னர்களுக்கு இவ்வேதாந்தமே ஏற்றதாம். நான் கேட்டவரையில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்வாமிகளும் மஹாதேவாச்ரமிகளும் மற்றும் பலபெரியோர்களும் ஞானிகள்கூடக் கர்மத்தை

**लोकसंग्रहमेवापि कर्मकर्तुमिहार्हसि ।**

என்றபடி லோகத்திற்காகவாவது செய்யவேண்டுமென்கிறனர். அன்றியும் கீதையைக்கேட்ட அர்ஜுனன் க்ஷத்திரிய தர்மமான யுத்தத்தைச் செய்தான். கண்ணனும்

**उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनः तत्त्वदर्शिनः ।**

என்று வேறொருவரைக் கைக்காட்டுகிறார். இதுபோன்ற நூல்களை எளிதில் ஒன்றிரண்டு சுலோகார்த்தங்களைக் கொண்டு நிச்சயிக்கலாகாது. உபக்ரமோபஸம்ஹார நியாயத்தால் எல்லாவற்றையும் ஆத்யந்தமாக யோசித்துப் பெரியோரிடம் கேட்டு நிர்ணயிக்கவேண்டும். விருத்யர்த்தமாகச் சிலர் சொல்லும் துர்வாதங்களைக்கேட்டு ஆஸ்திகர்கள் ஏமாறலாகாது. உண்மையாகக் கீதை ஸ்வதர்மத்தையே போதிக்கிறது. ஸ்வதர்மாசரணத்தால் தான் மனச் சுத்தி ஏற்படும். அதினால் ஈசாநுக்கிரஹம் கிடைக்கும். பாம்பரையாக மோக்ஷஸாம்ராஜ்யத்தையுமளிக்கும். இதை ஒவ்வொரு அத்யாயத்திலும் பல சுலோகங்களால் விளக்குகிறார். ஆதலால் வர்ணாச்ரமதர்மத்தைக்கைக்கொண்டாலன்றி நற்கதிக்கு வழிவேறில்லை.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

# ஆந்ஹிக க்ரம ஸங்க்ரஹம்.

த்விஜர்கள் பிரதிதினம் செய்யவேண்டிய கர்மா ஆந்ஹிகமாம். இதை ஸங்க்ரஹமாகக் காலத்திற்கேற்ப அவச்யமானதைத் தர்ம லோபமில்லாமல் எங்ஙனம் அனுஷ்டிக்கலாம் எனப் பலர் நேரிலும் கடிதமூலமும் கேட்பதால் இதற்காகவே தோன்றிய "ஆர்ய தர்மம்" பத்திரிகையில் பிரசுரித்து அதை ஏனையோரும் படிக்கத் தூண்டுவதென் கடமை. அதிகாலையில் அதாவது 55வது நாழிகையில் எழுந்திருத்தல் விதியாம். குறைந்தபக்ஷம் விடிய இரண்டல்லது ஒரு நாழிகைக்காவது எழுந்து ( ब्रह्म मुरारि ) என்ற பத்யங்களால், அறியாதோர் தமக்குத் தெரிந்த ஸ்துதிகளால் இஷ்டதேவதையை ஸ்துதித்தல்வேண்டும். ஸூர்யோதயகாலத்தில் தூங்குவது மிகப் பாபகரம். பகலில் வடக்குநோக்கியும் இரவில் தெற்கிலும் மலஜலவிஸர்ஜநம் செய்யவேண்டும். காதில் பூணூலைமாட்டித் தலையில் துணியைக்கட்டிக் கூடியமட்டும் மூச்சு (அதிகம்) விடாமல் பேசாமல் அதைமுடித்து குறியில் ஒன்று, ஆஸனத்தில் ஒன்று, இடதுகையில் ஐந்து, கால்கள் கைகளில் பத்து எழு முறையாக மண்ணிட்டுச் சுத்தம் செய்தல்வேண்டும். ஜலவிஸர்ஜனத்திற்கு நான்கு, தலத்திற்கு பனிரண்டு, பல்துவக்கல் உணவுகளில் பதினாறுஉள்ள முறை வாய்கொப்பளிக்கவேண்டும். தந்தரோகத்துக்குக் கண்டூஷமே மருந்து. மேற்கூறிய கார்யங்களுக்குப் பிறகு ஆசமநீயம் அவச்யம். கிழக்குமுகமாக உட்கார்ந்து பனிரண்டு அங்குல நீளமுள்ள ஆல், வேல், வேம்பு முதலிய பாலுள்ள மரக் குச்சிகளால் பல்துலக்கி ஸங்கல்பம் செய்துகொண்டு ப்ராதஸ்நானம் செய்யவேண்டும். (उदुत्तमम्) என்ற மூழ்கி ஓடும் ஜலத்தில் செய்வதுத்தமம். வருணஸூக்தம் आपोहिष्ठा என்ற மார்ஜனமந்தரம் हिरण्य என்ற அகமர்ஷணஸூக்தங்களைச் சொல்லி மூழ்கி ஸ்நாநாங்கதர்ப்பணம் செய்யவேண்டும். यन्मया என்ற சுலோகத்தால் கரையில் யக்ஷ்மதர்ப்பணம் செய்து ப்ராசீநாவீதியாக சிகாஜலத்தை முன்புறமாகச் சொட்டவிட்டு மேல்துணியை एकोयं என்ற சுலோகத்தால் நிவீதியாகப் பிழியவேண்டும். பஞ்சகச்சமணியாதவன் துணியில்லாதவனேயாவான். அவனைப் பார்த்தவனும்

ஸ்நானம் செய்யவேண்டும். கர்மகாலத்தில் அநாலத்தில் அதிகம் செய்வதைவிடக் காலத்தில் அசுசியாயிருந்தாலும் கொஞ்சமானு லும் சிலாக்யமானது, அர்க்யம், த்யானம் என்ற இரண்டும் மிக முக்கியமாம். மதாசாரப்படி புண்ட்ரதாரணம்செய்து ஜபிக்க வேண்டும். காயத்ரிதான் மந்த்ரஸாரம் நம்மை நமது நிலைமை யிலிருந்து கீழேதள்ளாதிருக்க இதைக் கூடுமானவரை அதம பக்ஷம் பத்துமுறையாவது ஜபித்தல்வேண்டும். ப்ராணுயாமம் சரீராரோக்கியத்திற்கும் மனச்சுத்திக்கும்காரணமாதலால் இடது மூக்கால் மெதுவாகக் காற்றையிழுக்கும்போது ஒன்று நடுவில் நிறுத்தி ஒன்று வலதுமூக்கால்விட்டு ஒன்ருக மூன்றுமுறையா வது அதைச்செய்யவேண்டும். இச்சந்தியைவிட்டவன் எக்கர்மா விற்கும்அருஹனல்லன். அடுத்தபடி சூர்யநமஸ்காரம் மிகஅவசிய மானது. आरोग्यं भास्करादिच्छेत् சரீரத்திற்கு ஆரோச்கியத்தை சூரியபகவானிடமிருந்து பெறவேண்டும் என்றபடி குறைந்தது பனிரண்டு நமஸ்காரம்செய்வது சரீரத்திற்கு வியாயாமம் (எக்ஸ்ர ஸைஸ்) ஆகும். பஞ்சாக்ஷரியோ அஷ்டாக்ஷரியோ ஜபித்தல் வேண்டும். கிருஹஸ்தனுக்கு ஔபாஸனம் நித்யகர்மாவாகும். அந்த மந்திரத்தை ஜபித்தாவது அடியோடு விட்டபாபத்திற்கு ஆளாகாமலிருக்கலாம். ப்ரம்மயக்ஞம் ப்ரதிதினமும் செய்யத் தக்கது. வேதம் பூராவாக வராவிட்டாலும் ருத்ரசமகத்தையா வது காயத்ரியையாவது ஜபித்து அதைச் செய்யவேண்டும். ஐந்து நிமிஷத்தில் முடியும் இதை ச்ராத்தம், சிராவணம் முதலிய தினத்திலேயே சிலர் செய்வது வருந்தத்தக்கது. பஞ்சாயதன பூஜை சுருக்கமாகச் செய்யலாம். வைச்வதேவம் என்ற பஞ்ச மஹாயக்ஞம் மாத்யான்ஹிகத்திற்குப் பிறகு செய்யவேண்டிய கர்மா. வைதிகர்களிலேயே ஆயிரத்திற்கு ஒருவரே இதையனுஷ் டிக்கின்றனர். ஸாயம்ஸந்தியை. இவைகளையாவது விடாதுசெய் தல்வேண்டும். ஒவ்வொன்றையும் விவரமாகப் பின்னர் ஓர்முறை எழுதுவாம்.

ஸோமதேவசர்மா.

---